## தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய நிறுவனங்கள் அறிவுறுத்த வேண்டும்!

# புயல் மழை: பொதுமக்கள் அத்தியாவசியத் தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம்!

## தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்!

சென்னை, நவ. 30-

புயல் இன்று கரையைக் கடக்கும என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் பொதுமக்கள் அத்தியாவசிய தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

பெஞ்சல் (FENGAL) புயல் 30.11.2024 அன்று கரையை கடக்கும் போது சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் அதிகனமழையுடன் 60 முதல் 90 கிலோ மீட்டர் வேகத்தில்காற்றுவீசக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே,

**கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை**

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. மேலும் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு, தேர்வு போன்ற எந்த நிகழ்வுகளும் நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்ட இதர மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிப்பது குறித்து தேவைக்கேற்ப முடிவெடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

**தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (Work from Home)**

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது பணியாளர்களை நாளை (30.11.2024) வீட்டிலிருந்து பணிபுரிய அறிவுறுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொதுப் போக்குவரத்து தற்காலிக நிறுத்தம்**

30.11.2024 அன்று பிற்பகல் புயல் கரையை கடக்கும் போது கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் ஓ.எம்.ஆர். சாலையில் பொது போக்குவரத்து சேவை தற்காலிகமாக நிறுத்தப்படும்.

**பொது மக்கள் வெளியில் செல்ல வேண்டாம்**

30.11.2024 அன்று புயல் கரையைக் கடக்கும் போது கனமழைக்கும், புயல் காற்றுக்கும் வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் அனைவரும் அத்தியாவசியத் தேவை தவிர இதர பணிகளுக்காக வெளியில் வருவதைத் கண்டிப்பாக தவிர்த்து பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. குறிப்பாக கடற்கரை, பொழுதுபோக்கு பூங்காக்கள், கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறு தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கேட்டுக் கொள்கிறது. மேலும், அரசின் அனைத்து பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு நல்க பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரு நாடுகளுக்கான எல்லைப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதா?

# இந்தியா - சீனாவிற்கான விசா விதிமுறைகளில் தளர்வுகள் எப்போது?

## நாடாளுமன்ற மக்களவையில் கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, நவ.30-

BRICS மாநாட்டின் இந்தியா -- சீனா ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான நீண்ட கால எலலைப் பிரச்னைகள் முடிவுக்கு வந்துள்ளதா? விசா வழங்குவதில் விதிகள் தளர்த்தப்படுமா? எதிர்காலங்களில் மீண்டும் இதேபோல் எல்லைக்கோடு பிரச்னைகள் வருமாயின், அவற்றைச் சரி செய்வதற்கான முறையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகத்திடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. வினவினார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

இந்தியா - சீனா இடையேயான எல்லைப் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் BRICS உச்சிமாநாட்டில் உடன்பாடான ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட தாக்கம் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பிரச்னைகள் குறித்து இந்த மாநாட்டில்தீர்வுகாணப்பட்டதா? அப்படியானால் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

எல்லைப் பிரச்னையின் முக்கியத்துவத்தை உணர்ந்து (LAC - Line of Actual Control) விவகாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்து, அவ்வப்போது தகவல்களாகவோ அல்லது வெள்ளை அறிக்கையாகவோ மக்களிடம் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

எல்லை ஒப்பந்தம் குறித்து சீன அரசாங்கத்திடம் இருந்து முறையான அறிக்கை வந்துள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தியா - சீனா எல்லைப் பிரச்னையில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து, சீன அரசு பொதுவெளியில் வெளிப்படையாக அறிவிக்கத் தயங்குவதாக ஒன்றிய அரசு உணருகிறதா என்றும் அவ்வா றெனில் அதன் விவரங் களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

எதிர்காலத்தில் தவறான புரிதல்களாலோ அல்லது வேறு காரணங்களாலோ, எல்லைக் கோடு (LAC - Line of Actual Control) விவகாரத்தில் மீண்டும் பிரச்னை ஏற்படுமாயின் அதனைச் சரிசெய்ய முறையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் இடையில் விசா வழங்குவதில் விதிகளைத் தளர்த்துவதற்கான திட்டங்கள் உள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

# ரயில் விபத்துகளைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி !



புதுடெல்லி, நவ.30-

கடந்த ஓராண்டில்நடைபெற்ற ரயில் விபத்துக்கள், அதற்கான காரணம், பலியானவர்கள் எத்தனை பேர்? இனி விபத்துக்கள் நடக்காமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிகைகள் என்னஎன்பது பற்றி மாநிலங்களவையில் தி.மு.அக். எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் :

ரயில் பயனபாதுகாப்புக்காக ஒன்றிய அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக கடந்த பத்தாண்டுகளில் ரயில் விபத்துக்கள் வெகுவாகக்குறைந்துள்ளன. 2014-15 ம் ஆண்டில் 135 விபத்துக்களாக இருந்தது, 2023-24 ம் ஆண்டு 40 விபத்துகளாகக் குறைந்துள்ளது.

2004-14 காலகட்டத்தில் 1711 ரயில் விபத்துக்கள் மூலம் 904 பேர் பலியாகினர். 3155 பேர் காயமடைந்தனர். கடந்த பத்தாண்டுகளில் அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 2014-24 காலகட்டத்தில் 678 விபத்துக்களாக அது குறைந்தது. இதில்; 748 பேர் பலியாகினர். 2087 பேர் காயமடைந்தனர். கடந்த ஓராண்டில் ஏற்பட்ட 29 விபத்துகள் மூலம் 17 பேர் பலியாகினர்; 71 பேர் காயமடைந்தனர்.

மனித உயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுடன் ரயில்வேக்கும் விபத்துக்களால் இழப்பு ஏற்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் விபத்துக்களால் ரயில்வேக்கு ஏற்பட்ட இழப்பு 313 கோடி ரூபாய்.

விபத்துக்களால் உயிரிழப்பு மற்றும் காயமடைந்தவர்களுக்கான இழப்பீட்டை ரயில்வே நடுவர் மன்றம் முடிவு செய்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும் இழப்பீடாக 26.22 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ரயில் விபத்துகளுக்கு மனிதத் தவறுகளே காரணம்!**

ஒவ்வொரு விபத்தின் போதும், அதற்கான காரணங்களைக் கண்டறிய நிபுணர் குழு அமைக்கப்படுகிறது. அந்த அறிக்கையின்படி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான ரயில் விபத்துகளுக்கு ரயில் பெட்டிகள், பாதைகள், கருவிகள் பழுதாவது மற்றும் மனிதத் தவறுகளே முக்கிய காரணம்.

இவற்றை சரிசெய்யவும், பாதுகாப்பான ரயில் பயணத்தை உறுதி செய்யவும் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரயில் பாதை புனரமைப்பு, புதிய கருவிகள் வாங்குவது, தேவையான இடங்களில் பாலங்கள் கட்டுவது போன்ற பணிகள் இந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

ரயில் பாதைகளை அமைக்கும் பணியில் தானியங்கி இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அந்தப் பணியில் மனிதத் தவறுகளுக்கு வாய்ப்பில்லாத நிலையை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கும் வகையில் நாடு முழுவதும் 6608 ரயில் நிலையங்களில் எலெக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் சிஸ்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. சுமார் பதினோராயிரம் லெவல் கிராசிங்குகளிலும் இந்த சிஸ்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம் பெருமளவு விபத்தைக் குறைக்க முடிகிறது.

பனிக்காலத்தில் ரயில் டிரைவர்களுக்கு உதவும் வகையில் ஜி.பி.எஸ். கருவி உதவியிலான பாதுகாப்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆளில்லாத லெவல் கிரஸிங்கே இல்லை என்ற நிலையை ஐந்தாண்டுகளுக்கு முன்பே எட்டிவிட்டோம். அடிமட்ட பாலங்கள், மேம்பாலங்கள் போன்றவற்றை அமைத்து பணியாளர் உள்ள சுமார் ஏழாயிரம் லெவல் கிராஸிங்குகள் நீக்கப்பட்டுள்ளன.

விபத்தைத் தவிர்ப்பதில் முக்கிய பங்காற்றும் கவாச் தொழில்நுட்பம் தென், மத்திய மற்றும் வடக்கு ரயில்வேயில் சுமார் 1548 கிலோமீட்டர் தொலைவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளது. டெல்லி - மும்பை, டெல்லி - ஹவுராமார்க்கத்தில் சுமார் 3000 கிலோ மீட்டர் ரயில் பாதையில் கவாச் தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன.

இதுதவிர ரயில் பாதைகளில் தொடர்ச்சியான ரோந்துப் பணிகளும் தொய்வின்றி நடக்கின்றன. இதில் ரயில் பாதைகளில் ஏற்படும் விரிசல்கள் கண்டறியப்பட்டு சரி செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

# சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு டிச.15-ல் தேர்தல்!

## தேர்தல் அதிகாரி நீதிபதி வீ. பாரததாசன் அறிவிப்பு!

சென்னை, டிச.01-

‘சென்னை பத்திரிகையாளர் மன்றம் (பிரஸ் கிளப்) 52 ஆண்டு கள் பழமை வாய்ந்தது. இந்த மன் றத்துக்கு பல ஆண்டுகளாக தேர் தல் நடத்தப்படவில்லை. இந் நிலையில், தேர்தல் நடத்தும் அதி காரியாக, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி வீ.பாரதி தாசன் கடந்த 18 ம் தேதி நியமிக்கப் பட்டார்.அதைத் தொடர்ந்து, சென்னை பத்திரிகையாளர் றத்துக்கான தேர்தல் அட்டவ ணையை தேர்தல் அதிகாரி நீதி பதி பாரதிதாசன் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது: சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு ஒரு தலைவர், 2 துணைத் தலைவர்கள், ஒரு பொதுச்செயலாளர், ஒரு இணைச்

செயலாளர், ஒரு பொருளாளர் ஆகிய 6 நிர்வாகிகளையும், 5 செயற்குழு உறுப்பினர்களையும் தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கை வெளியிடப் படுகிறது.

இந்த தேர்தலில் போட்டியிடு வதற்கான வேட்பு மனு தாக்கல்

நவ.30ம் தேதி தொடங்கி டிச.7ம் தேதி முடிவடையும். தினமும் (ஞாயிறு விடுமுறை தவிர) பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். டிச.9ம் தேதி பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை வேட்பு மனுக்கள் பரிசீலிக்கப்படும். 10ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வேட்பு மனுக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். டிச.15ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு வாக்குகள் எண்ணப் முடிவுகள் அறிவிக்கப்படும்.

என்னிடம் வழங்கப்பட்ட உறுப்பினர்கள் பட்டியல்படி, மொத்தம் 1,502 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த பட்டியலில் உள்ள நபர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கவும் முடியும். தேர்தலின்போது, உறுப் பினர்களுக்கு புதிதாக வழங்கப்பட்ட அடையாள அட்டையை கண்டிப்பாக காண்பிக்க வேண்டும். தேர்தல் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** “அ.தி.மு.க. கள ஆய்வில் நடப்பது மோதல் அல்ல, கருத்துப் பரிமாற்றம்“ என்று சொல்கிறாரே எடப்பாடி ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; எடப்பாடி அவர்களின் பார்வையில், கருத்துப் பரிமாற்றம் என்பதே, மோதல் - ஆவேசத் தாக்குதல் - அடிதடிப் பரிமாற்றம்தான் போலிருக்கிறது !**

**கீழே தரையில் விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை - என்ற கதையாக இருக்கிறது எடப்பாடியின் சரடு !**

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை மாநகரத்தில் நல உதவிகள் - பேரணி - கொடியேற்றல்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் நல உதவிகள் வழங்கினர் !

### ஆ.செந்தில் தலைமை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - வண்ணை அரங்கநாதன் - டாக்டர் வை.முத்துராஜா பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.30 -

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை நகர் பகுதியில் உள்ள பத்து வட்டக் கழகங்களில் இருசக்கர வாகனங்களில் சுமார் 1000க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாகச் சென்றனர். மாநகரச் செயலாளர் செந்தில் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் அனைத்து இடங்களிலும் பொது மக்களுக்குஇனிப்புகள் வழங்கி இரு வர்ணக் கொடியை ஏற்றினார்கள். இதற்கு முன்னதாக துணை முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு நேச கரம் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது மழை பெய்துகொண்டிருந்தாலும் கழக உடன்பிறப்புக்கள் உற்சாகமாக இரு சக்கர வாகன பேரணி நடத்தி உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேசக்கரம் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்வினை அடுத்து 7,8,9,18,22,23,24,

25,37,38 ஆகிய வார்டுகளில் 11இடங்களில் மாநகர கழக செயலாளர் ஆ.செந்தில் தலைமையில் கழக நிர்வாகிகளுடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் இனிப்புகள் வழங்கி கழக கொடியினை ஏற்றி வைத்தார்கள். நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர்.கவிச்சுடர் கவிதைப் பித்தன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் வண்ணை அரங்கநாதன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை முத்துராஜா, மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர், துணை மேயர் மு.லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப. சரவணன், சு.சண்முகம், பொதுக் குழு உறுப்பினர் என். சாத்தையா, அ.ரத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.என்.எம். பாலு,

சி.அரங்கநாயகம், கவிவேந்தன், டி.எம்.ஆர். ராமமூர்த்தி, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, மு. கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி,

மா.மணிவேலன், பா. ரெங்கராஜன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், மு.க. அறிவுடைநம்பி, மு.ராஜதுரை, பிரேம் ஆனந்த், காதர் கனி, பிரசன்னா, எஸ். செல்வம், ராமச்சந்திரன், க.செல்லையா, ம. ஆனந்த், சரவணன், நவீன் ஆண்டனி, ச.அருண் குமார், கதிரேசன், முத்துக்கருப்பன், ஆர்.எம். சத்யா, மாலையீடு பிரபு, பால்ராஜ், மகேந்திரன், ராஜேந்திரன், திருவப்பூர் இளங்கோவன், செல்வராஜ், விஜயக்குமார், கண்மணி சுப்பு, எல்.ஐ சி ரமேஷ், தனபால், ஞானவேல், ஹரிகரன், மகேந்திரன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## புலிவலம் ஏ.தேவா தலைமை! சி.கே.எஸ்.எழிலரசன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - நலத்திட்ட உதவிகள் !

## மாவட்டச்செயலாளர்பூண்டிகே.கலைவாணன்எம்.எல்.ஏ.வழங்குகிறார்!

திருவாரூர், டிச. 1

திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.கே.எஸ். எழிலரசன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் (27.11.2024) அன்று மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (1.12.2024 (ஞாயிற்றுக்கிழமை) திருவாரூர், தண்டலை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்கும் விழா நடைபெறுகிறது.

ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா தலைமை வகிக்கிறார்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் நா.இளையராஜா, சி. ஆனந்த்,குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் எம்.சி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்தர், சேகர் (எ) ஆர்.கலிய பெருமாள், ஐ.வி.குமரேசன், நகரச் செயலாளர் எஸ். வி.பக்கிரிசாமி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் எம்.சி, பேரூர் செயலாளர் பூண்டி கே. கலைவேந்தன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் சி.கலிய பெருமாள், நகர பொருளாளர் ஆர்.ரஜினி சின்னா எம்.சி, மாவட்ட பிரதிநிதி வளமல் எஸ்.சோமு, ஒன்றியக்குழு உறுப்பினர் கே.முருகேசன்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.கே.முருகானந்தம், எம்.பி.எடிசன், பி.தாஹீர் அலி, வி. வினோத்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் எம்.சித்தி விநாயகம், ஒன்றிய அமைப்பாளர் எம்.எஸ்.பிரகாஷ், நகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எம். ரசின்பைசல், திருவாரூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.புருஷோத்தமன், என். கே.சீரடி ராஜா, எஸ். சுரேஷ், ஐ.ஸ்டாலின் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். கல்யாணசுந்தரம் நன்றி கூறுகிறார்.